



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ஆவடி, அன்னனூர், கோணாம்பேடு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள், புழல் மேட்டுபாளையத்தில் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் சேத்துப்பட்டில் மேம்படுத்தப்பட்ட சிறிய கால்பந்து மைதானம், என 20.89 கோடி ரூபாய் செலவில் 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திருமதி மாலதி லக்ஷ்மன், செந்தில்தாஸ் வேலாயுதம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### திருநெல்வேலி மாவட்ட – மாற்றுக் கட்சியினர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

## முன்னாள் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் பால் மனோஜ்பாண்டியன் ஏற்பாட்டில் நிகழ்ச்சி!

**சென்னை, நவ.21-**

**தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஆலங்குளம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஏற்பாட்டில் மாற்றுக் கட்சியையைச் சேர்ந்த விருதுநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.கதிரவன் - திருநெல்வேலி மாநகர் மாவட்டச் செயலாளர் டி.எல்.நாராயணன் - அமைப்புச் செயலாளர் செள.ராதா ஆகியோர் தலைமையில் 70க்கும் மேற்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (19.11.2025) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் ஏற்பாட்டில், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த விருதுநகர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ்.கதிரவன் - திருநெல்வேலி மாநகர் மாவட்டச் செயலாளர் டி.எல்.நாராயணன் - அமைப்புச் செயலாளர் செள.ராதா ஆகியோர் தலைமையில்,

மாற்றுக் கட்சியை சேர்ந்த ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய முன்னாள் உறுப்பினர் வீ.ஜெயக்குமார், நாங்குநேரி தொகுதி முன்னாள் செயலாளர் ஆர்.எஸ்.முருகன், கார்த்திகா ஸ்டோர்ஸ் தொழிலதிபர் ஐ.குபேந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட பொருளாளர் எம்நூருல் அமீன், முதலியார்பட்டி காந்திநகர் ஜமாத் தலைவர் எம்.பஸ்லூர்ரகுமான், கடையம் ஜமாத் தலைவர் சே.அப்துல்ரகுமான், செய்தி தொடர்பாளர் சி.டென்சிங்குசுவாமிதாஸ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் டி.பாரத், மாநில போக்குவரத்து பிரிவு செயலாளர் எஸ்.ஏ.சேர்மதுரை, திருநெல்வேலி புறநகர் மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் எஸ்.கந்தன், நெல்லை மாநகர் பகுதிச் செயலாளர் சிவஅருணா. அருண்குமார், நெல்லை மாநகர் மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் சாந்தகுமார், நெல்லை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர்.இளைஞர் அணிச் செயலாளர் எஸ்.லெனின், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ஆர். வினோத்குமார், விருதுநகர் ஒன்றிய வர்த்தக அணிச் செயலாளர் தா.இம்மானுவேல்ராஜா, சேரன்மாதேவி ஒன்றியச் செயலாளர் ஏ.கணபதி, சேரன்மாதேவி பேரூர்ச் செயலாளர் எஸ்.மாசாணம், சேரன்மகாதேவி கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சின்னதுரை, கல்லிடைகுறிச்சி பேரூர் செயலாளர் டி.பாலசுப்பிரமணியன், வீரவநல்லூர் பேரூர்ச் செயலாளர் எஸ்.பி.முருகானந்தம், மந்தியூர் ஊராட்சி தலைவர் கல்யாணசுந்தரம், சேரன்மாதேவி மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பத்ரகாளி, நெல்லை மாவட்ட பனை பொருட்கள் கூட்டுறவு சம்மேளம் ஜே. ஜபராஜ், சேரன்மாதேவி மேற்கு ஒன்றிய பொருளாளர் எஸ்.ஞானபொன்ராஜ்பாண்டியன், மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் கே.புவனேஸ்வரி, மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர்கள் சி.எம்.மாரிசெல்லையாபிரபு, வீ.நீலகண்டன், ஓம்சேர்மபிரபு, வீ.ஆனந்த், கூடுதல் அரசு முன்னாள் குற்றவியல் வழக்கறிஞர்கள் பி.அருள்மொழிமாறன், ஆர்.சூர்யபிரகாஷ், மதுரை மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர்கள் ஜெ.திலிப்குமார், அர்ஜூனன், அரசு முன்னாள் வழக்கறிஞர் ஆ.கார்த்திக், வீட்டுவசதி வாரிய முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜேஷ்குமார், வழக்கறிஞர் பிரிவைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் சுரேஷ், விக்னேஸ்வ ரன், பி.ரக்ஷந்த் ஆலங்குளம் தொழிலதிபர் சி.குமார், மதுரை தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபார்கள் சங்க சண்முகதர்ஷன், மாவட்ட எம்.ஜி.ஆர்.இளைஞர் அணி இணைச் செயலாளர் வி.கனக பிரசாத், ஆலங்குளம் பேரூர் இணைச் செயலாளர் வி.சேர்மக்கனி (எ) கணேசன், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் கே.அருண்குமார், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் சி.கண்ணன், ஆலங்குளம் பேருர் இளைஞர் அணி துணைச் செயலாளர் ஏ.சதண்ராஜ், கல்லிடைக்குறிச்சி அம்மா பேரவை செயலாளர் எம்.அய்யப்பன், மாவட்ட பிரதிநிதி சி.பி.ஆறுமுகம், அம்மா பேரவை செயலாளர் வீரவந ல்லூர் எஸ்.முப்பிடாதி, சேரன் மகாதேவி ஒன்றிய இணைச் செயலாளர் ஜி.ஜான்சன் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திருநெல்வேலி மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் அப்துல்வகாப், எம்.எல்.ஏ., திருநெல்வேலி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் கிரகாம்பெல், ஆலங்குளம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

# மயிலாடுதுறையில் எஸ்.ஐ.ஆர். பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பார்வையிட்டார்!

மயிலாடுதுறை, நவ. 21 –

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை, சீர்காழி குத்தாலம் ஆகிய ஒன்றியம் மற்றும் மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய நகரத்திலும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் கொண்டு வந்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகளை பிற்படுத்தப்பட் டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நேரில் பார்வையிட்டார் .

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் நீடூர் பள்ளிவாசலில் முஸ்லிம் ஜமாத்தார் கள் மற்றும் கழகத்தின் சார்பில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கணக்கீட்டு படிவத்தை பூர்த்தி செய்யும் பணியையும், சீர்காழி மேற்கு ஒன்றியம் சட்டநாதபுரத்திலும், சீர்காழி நகரம் இரணியன் நகர், மயிலாடுதுறை நகரம் நாஞ்சில் நாடு முத்தாலம்மன் கோயில் ஆகிய இடங்களில் நடைபெறும் எஸ் ஐ ஆர் பணியையும், அதைத் தொடர்ந்து குத்தாலம் கிழக்கு ஒன்றியம் மங்கநல்லூரிலும் குத்தால மேற்கு ஒன்றியம் கொழையூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு ( எஸ் ஐ ஆர் ) பணிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாகன் பார்வையிட்டார்.

நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப் பினர் எஸ்.ராஜ்குமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், ஒன்றிய கழக செயலாளர்கள் ஞான. இமையநாதன், ப. முருகமணி, அமிர்த.விஜயகுமார், எம்.அப்துல் மாலிக், என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஏ. ஆர். ராஜா, பஞ்சு.குமார், பி.எம். அன்பழகன். செல்லசேது.ரவிக்குமார்,மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என் செல்வராஜ்,

சீர்காழி நகரக் கழக செயலாளர் ம.சுப்பராயன். பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், பி கென்னடி பி.சிவதாஸ், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வ முத்துக்குமாரன், சீர்காழி நகர மன்ற உறுப்பினர்கள் ராமு, ஏ.பி.எஸ்.பாஸ்கர் மற்றும் ஒன்றிய, நகர . கிளை, வார்டுக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிக்கை!

*நாமக்கல், நவ. 21 -*

*நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டு றவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.*



*அதில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் இன்று (21.11.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்குகிறார். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா. மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் பெ.ராம லிங்கம் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.*

*இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் (நவம்பர் 27) பிறந்தநாள் விழா குறித்து.*

*கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து,*

*இவ்வாறு இவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்ற தொகுதி, வானூர் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் சிறப்பு ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு SIR குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.